O.S.39 -2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.39 /2018

பிரதிவாதி தரப்பு 2வது சாட்சி மாணிக்கம் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மாணிக்கம் | வயது | : | 68/2026 |
| தகப்பனார் பெயர் | : | வெத்தி | தாலுகா | : | ஆலங்குடி |
| கிராமம் | : | வெண்ணாவல்குடி | தொழில் | : | காவலாளி |

நாள்-09.02.2026

பி.வா.சா.2

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் படித்துபார்த்துதான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

2) முதல் விசாரணை வாக்குமூலத்தின் பத்தி 3-ல் தாவா சொத்துக்களை தவிரவேறு சொத்துக்களை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3) இன்னும் பிற சொத்துக்கள் என்பது 3 அயிட்ட சொத்துக்கள் ஆகும். அந்த 3 அயிட்ட சொத்துக்கள் அரங்குளவன், முனியாண்டி ஆகியோர் பெயரில் உள்ளது. பின்பு சரசு, வள்ளி ஆகியோர் பெயரில் பிரித்துக்கொடுக்கப்பட்டது. அரங்குளவன் பெயரில் உள்ள சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியாது. அரங்குளவனின் தகப்பனார் எப்போது இறந்தார் என்று தெரியாது. எந்த வருடம் இறந்தார் என்றும் தெரியாது.

4) 1ம் வாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்று தெரியாது. எந்த வருடம் என்றும் தெரியாது. 2ம் வாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்று தெரியாது. எந்த வருடம் என்றும் தெரியாது.

5) முதல் விசாரணை வாக்குமூலம் பாரா4-ல் 2004ம் வருடம் பாகம் பிரித்துக்கொண்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அரங்குளவனுக்கும், முனியாண்டிக்கும் இடையே பாகப்பிரிவினை நடந்தது. வள்ளிக்கண்ணு, சரசு-விற்கு பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது. சொத்தை விற்று பணமாக கொடுக்கப்பட்டது.

மு.மா.நீ,

அரங்குளவனுக்கும், முனியாண்டிக்கும் பாகம் பிரிக்கும்போது, வள்ளிக்கண், சரசு-க்கான பாகத்திற்கு சொத்தை விற்று கொடுத்தார்கள். எந்த சொத்தை விற்றார்கள் என்பதும், அதன் விஸ்தீரணம் என்ன என்பதும் எனக்கு தெரியாது. அந்த சொத்தை யாருக்கு எந்த தேதியில் விற்றார்கள் என்று தெரியாது.

6) அவ்வாறு பாகம் பிரிக்கும்போது, தோப்புப்பட்டி பொதுமக்கள் 20 பேர் இருந்து பாகத்தை பிரித்து கொடுத்தார்கள். மேட்டுப்பட்டியில் உள்ள முனியாண்டி, அரங்குளவன் வீட்டில் வைத்து பிரித்துக்கொடுத்தார்கள்.

7) அவ்வாறு பாகப்பிரிவினை பிரிக்கும்போது பாகச்சீட்டு எழுதவில்லை. அவ்வாறு பாகப்பிரிவினை பிரிக்கும்போது நான் அங்கு இல்லை.

8) எனக்கு இந்த வழக்கு விபரங்கள் எதுவும் தெரியாது என்றாலும், பாகம் எதுவும் பிரிக்கப்படவில்லை என்றாலும், எனக்கு சொல்லிக்கொடுத்ததன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) எவ்வளவு ரூபாய்க்கு சொத்துக்களை விற்றார்கள் என்றால், 20 லட்சத்திற்கு விற்றார்கள். எந்த தேதியில் 2ம் பிரதிவாதியின் கணவர் எப்பொழுது பணத்தை கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. 2014ம் வருடம் அரங்குளவன் சொல்லி எனக்கு தெரியும். அவ்வாறு அரங்குளவன் வாதிகளுக்கு பணம் கொடுத்ததற்கு ரசீது எதுவும் எழுதி வாங்கவில்லை.

10) 1ம் பிரதிவாதி முனியாண்டி எந்த தேதியில் பணம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது.

11) 2ம் பிரதிவாதி கோவிந்தம்மாளுக்கும், அரங்குளவனுக்கும் எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி கோவிந்தம்மாளுக்கும், அரங்குளவனுக்கும் 2014-லிருந்தே சண்டை ஆரம்பித்துவிட்டது. அவர்கள் இருவரும் பிரியவில்லை. ஒன்றாகத்தான் இருந்தார்கள். அவர்களிடையே விவாகரத்து வழக்கு நடைபெற்ற விபரம் தெரியாது.

12) 2ம் பிரதிவாதியை அரங்குளவன் அடித்து, உதைத்து தாலியை பறித்துக்கொண்டார் என்ற விபரம் சொல்லித்தான் தெரியும். நேரடியாக தெரியாது. அது எந்த தேதி, எந்த மாதம், வருடம் என்று எனக்கு தெரியாது. இறக்கும் வரை இரண்டு பேரும் சண்டை போட்டுக்கொண்டே இருந்தார்கள்.

13) நான் போலீசில் புகார் கொடுக்க சொல்லவில்லை. ஒற்றுமையாக இருக்கத்தான் சொன்னேன்.

14) 2ம் பிரதிவாதி கோவிந்தம்மாளுக்கும், அரங்குளவனுக்கும் இடையே என்னென்ன வழக்குகள் நடந்தது என்று எனக்கு தெரியாது. அரங்குளவன் பாகப்பிரிவினை வழக்கு போட்டிருப்பதாக என்னிடம் சொன்னார். முனியாண்டிக்கு எதிராக வழக்கு போட்டுள்ளதாக சொன்னார்.

மு.மா.நீ,

15) 2ம் பிரதிவாதி கோவிந்தம்மாளின் மகனுக்கு எந்த தேதியில் விபத்து ஏற்பட்டது என்றால் 2014ம் வருடம் விபத்து ஏற்பட்டது. 2ம் பிரதிவாதி கோவிந்தம்மாளின் மகன் பெயர் எனக்கு தெரியாது.

16) விபத்து இழப்பீட்டு வழக்கு எண் எனக்கு தெரியாது. இழப்பீட்டு தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது. அந்த தொகையை கோவிந்தம்மாள் எப்பொழுது வாங்கினார் என்ற விபரமும் எனக்கு தெரியாது.

17) தாவா சொத்தில் உள்ள கட்டிடங்கள் அரங்குளவனுக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணம் எதையும் பார்க்கவில்லை. பங்கு இருப்பதால், உரிமை இருப்பதாக சொன்னேன்.

18) நான் மேட்டுப்பட்டி முனிக்கோவிலில் வாட்ச்மேனாக இருக்கிறேன்.

19) தாவா சொத்துக்கள் சம்மந்தமாக எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும், உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. கோவிந்தம்மாள் அழைத்தன் பேரில்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

2) வழக்கு சொத்து மேட்டுபட்டி கிராமத்தில் உள்ளது.

3) சரசு, வள்ளியம்மை ஆகியோர் கோவிந்தம்மாளுக்கு எதிராக இந்த வழக்கு போட்டுள்ளார்கள். சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியாது. அதன் விஸ்தீரணமும் தெரியாது.

4) 2,3 பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) 2,3 பிரதிவாதிகள் என்னை வழக்கறிஞரிடம் அழைத்து சென்று கையெழுத்து போடச்சொன்னதன் பேரில் நான் கையெழுத்து போட்டேன் என்றாலும், அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. நான்தான் வழக்கறிஞருக்கு விபரங்கள் சொன்னேன்.

6) கோவிந்தம்மாள் கேட்டுக்கொண்டதன் பேரில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) 1ம் வாதி வள்ளிக்கண்ணு சேந்தாக்குடி கிராமத்தில் வசித்து வருகிறார். 2ம் வாதி சரசு அரிமளத்தில் வசித்து இறந்துவிட்டார்.

8) வாதிகளுக்கு சீர் வரிசைகள் கொடுத்து திருமணம் செய்த விபரம் எனக்கு தெரியும்.

9) நான் சொல்வதுபோல் வாதிகளுக்கு சீர் வரிசைகள் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

மு.மா.நீ,

10) தாவா சொத்துக்கள் பற்றியும், உபய வாதிகளின் குடும்ப விபரங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் , 2,3 பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.